# இலக்கியங்களும் திரை இசைப் பாடல்களும்

# Literature and Film Songs

***வி. கவிதா***
முனைவர் பட்ட ஆய்வாளர்

***முனைவர் அ. இருதயராஜ்***
பேராசிரியர் (நெறியாளர்)
தமிழ்த்துறை, மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

**V. Kavitha**
*Ph.D. Research Scholar*

**Dr. A. Irudayaraj**
*Professor (Guide)*
*Department of Tamil, Faculty of Languages*
*Vels Institute of Science, Technology and Advanced Studies, Chennai, India*

## *ஆய்வுச் சுருக்கம்*

*தமிழரின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் வகையில் பண்டைய காலத்தில் வாழ்ந்த புலவர்கள் என்றும் அழியாத தமிழ் இலக்கியங்களை இயற்றி பல அரிய கருத்துக்களை நமக்கு அளித்துவிட்டு சென்றிருக்கின்றனர். தமிழ் இலக்கியங்களின் உயிர் நாடியாக விளங்குவது காதலும், வீரமும், பக்தியும் என்று சொன்னால் அது மிகையாகாது. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டு, தொகுக்கப்பட்டவையே தமிழ் இலக்கியங்கள், அவை அகம், புறம் பற்றி பேசும் சங்க இலக்கியமாகவும், அதனை தொடர்ந்து அறத்தை வலியுறுத்தும் அற இலக்கியமாகவும், வீடு பேற்றிற்கு துணை செய்யும் பக்தி இலக்கியமாகவும், பல்சுவை கூறும் காவியங்களாகவும் வளர்ச்சியடைந்து வந்துள்ளதை நாம் கண்கூடாக காண முடிகிறது.*

## Abstract

*In order to make the world aware of the greatness of Tamils, the ancient poets have written immortal Tamil literature and left us many rare ideas. It would not be an exaggeration to say that love, valour and devotion are the lifeblood of Tamil literature. Tamil literature has been sung and compiled by various poets in different periods. They have developed into Sangam literature which talks about internal and external issues, followed by Dharma literature, devotional literature which helps to get home and epics of various tastes.*

***Keywords:***
*Sangam Literature, Film Music, Kurunthokai, Poets, Vali, Kannadasan*

### ***ஆய்வு நோக்கம்:***

*இலக்கியங்கள் யாவும் கற்று தேர்ந்த பெருமக்களால் மட்டுமே படித்தறிந்து புரிந்து கொள்ளக்கூடியவையாக இருந்தமையே இலக்கியங்களை பலரும் நெருங்க முடியாமல் இருந்ததற்கு காரணம் என்று கூறலாம். ஆனால் அதனையும் ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு புலவர்களின் மூலக்கருத்துக்களை சிதைக்காமல் அவர்களின் பாடல் வரிகளை பாமரனும் கண்டு கேட்டு ரசிக்கும் படியாய் தம் பாடல்களுள் புகுத்தி சாதனை படைத்துள்ளனர் பிற்கால கவிஞர்கள்.*

*அப்பாடல் வரிகளையும், அவை இடம் பெற்றுள்ள திரையிசைப் பாடல்களையும் சிறு தொகுப்பாக அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:***
*சங்க இலக்கியம், திரை இசை, குறுந்தொகை, கவிஞர்கள், வாலி, கண்ணதாசன்*

**Citation**

Kavitha, V. and A. Irudayaraj "Literature and Film Songs." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 1–6.

**திரை இசையில் இலக்கியம் புகுத்திய கவிஞர்கள்**

***காவியத்தாயின் இளைய மகன்***
***பாமரஜாதியில் தனிமனிதன்***
***நான் படைப்பதினாலே என் பேர் இறைவன்***

*என்று பாடிய பெருங்கவிஞன் கண்ணதாசன், இவரின் பாடல்களில் அங்கு இங்கு என்றில்லை எங்குமே இலக்கியத்தின் வாசத்தை உணர முடியும். வாலிபக் கவிஞன் என்று அனைவராலும் பாராட்டப்படுபவர் கவிஞர் வாலி, அவரது படைப்பில் இலக்கிய பயன்பாடுகள் பலவும் இக்கால இளைஞர்களும் ரசிக்கும்படியான புதுமையான போக்கில் அமைந்திருப்பது சிறப்பு.*

*மூத்த கவிஞர்களான கண்ணதாசன் வாலியைவிட வயதில் சிறியவரானாலும் இலக்கியத்தை திரையிசையில் அதிகமாக பயன்படுத்திய பெருமைக்குரியவர் கவிஞர் வைரமுத்து. இவரது பாடல்களுக்கான இலக்கிய வரிகளின் தேடல் மகத்தானது. இவர்களை தொடர்ந்து இன்னும் பல கவிஞர்கள் திரையிசையில் இலக்கியங்களால் ஆட்சி செய்து வருகின்றனர்.*

**சங்க இலக்கிய பாடல்களும் - திரையிசைப் பாடல்களும்**

*கற்றோர் சபையில் கற்றோனால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியவையாய் அமைந்த பாடல்கள் சங்க இலக்கிய பாடல்கள். அப்பாடல்கள் தான்புரிந்துக் கொண்ட அளவிலேயே ஒரு எளிய பாமரனும் உய்த்துணரும் படியாக சில கவிஞர்கள் சில ஆண்டுகளாக முயற்சி செய்து வெற்றியும் கண்டுள்ளனர். அவ்வெற்றிக்குரிய பாடல்கள் பின்வருமாறு,*

***கேட்டிசின் வாழி தோழி அல்கற்***
***பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய***
***வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து***

*இப்பாடல் சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான குறுந்தொகையில் முப்பதாவது பாடலாக அமைந்துள்ளது. தன் தலைவன் கனவிலே வந்து தன் மெய் கலந்து பின் விடியும் வேளையில் எங்கு சென்றான்? ஏன் எனக்கிந்த பொய்யின்பத்தை வழங்கலானான்? என்று தன் தோழியிடம் தலைவியானவள் வினவுவதாக இப்பாடலாசிரியர் கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியுள்ளார். இப்பாடலை மூலமாக கொண்டு 1961 ஆம் ஆண்டு வெளியான "பாக்கியலட்சுமி" என்னும் திரைப்படத்தில் இளம் விதவையாக சவுகார்ஜானகி அவர்கள் நடிப்பில், பி சுசிலா அவர்கள் குரலில், கவிஞர் கண்ணதாசன் அவர்களின் பாடல் வரிகளாய் எங்கும் ஒலித்தது பின்வரும் பாடல்,*

***மாலை பொழுதின் மயக்கத்திலே - நான்***
***கனவு கண்டேன் தோழி!***
***கணவர் என்றால் அவர் கனவு முடிந்ததும்***
***பிரிந்தது ஏன் தோழி!***

*தன் கணவனை பிரிந்து அவன் நினைவில் வாழும் ஒரு இளம் பெண்ணின் மனதின் ஒலியாய் ஒலித்து அனைத்து தரப்பு மக்களின் பேராதரவையும் பெற்றது இப்பாடல்.*

*தலைவன் - தலைவியாய் இல்லறத்தில் வாழும் போது இன்பமும், தலைவியை பிரிந்து பொருள்தேட செல்லும் பிரிவானது துன்பமும் தருவதாய் தலைவன் உரைப்பான். இதனையே கண்ணதாசன் மேற்கண்ட அதே பாடல் வரிகளில் காணலாம்.*

***இன்பம் சிலநாள் துன்பம் சிலநாள்***
***என்றவர் யார் தோழி?***
***இன்பம் கனவில் துன்பம் எதிரில்***
***காண்பது ஏன் தோழி?***

*இப்பாடல் அக்காலம் முதல் இக்காலம் வரை மங்கையர் மனதில் மங்காத ஒலியாய் ஒலித்துக் கொண்டிருக்கிறது.*
*அதனைத்தொடர்ந்து,*

***கான மஞ்ஞை யறையீன் முட்டை***
***வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்***

*இப்பாடல் குறுந்தொகையில் குறிஞ்சித்திணையின் கபிலர் என்னும் பெரும்புலவரால் பாடப்பெற்ற பாடலாகும். மயிலானது சுட்டெரிக்கும் பாறைகளுக்கு இடையே தன் முட்டைகளை பாதுகாப்பின்றி இட்டுச்செல்லும். அம்முட்டைகளை முசு என்னும் கருங்குரங்கின் குட்டிகள் பந்து என நினைத்து பாறை மீது உருட்டி விளையாடும். முட்டையின் உள்ளிருக்கும் குஞ்சுகளுக்கோ அது ஆபத்தாய் அமையும். அது போலவே என் தலைவனும் என் நட்பினை பாதுகாப்பாய் வைக்காது ஊரார் பேசும்படி பாதுகாப்பின்றி விட்டுச் சென்றானேன்? என்று தலைவி தன் நிலை உரைப்பதாய் அமைந்திருக்கும் இப்பாடலின் மூலமானது சிறிதும் சிதையாமல் 2014 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் இயங்குபடமான ''கோச்சடையான்'' திரைப்படத்தில் இளவரசி வதனா (நடிகை - தீபிகாபடுகோன்) தலைவன் ராணாவை (நடிகர் - ரஜினிகாந்த்) எண்ணி ஏங்கிப் பாடுவதாக பாடல் களம் அமைந்திருக்கும். கவிஞர் வைரமுத்து அவர்கள் நுட்பமாக இப்பாடலை கையாண்ட விதம் அனைவரின் பாராட்டையும் பெற்றது. அதனைத் தொடர்ந்து,*

***கன்றும் உண்ணாது காலத்தினும் படாது***
***நல் ஆண் தீம் பால் நிலைத்து உக்கா***

*என்ற வெள்ளி வீதியாரின் குறுந்தொகை பாடலில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தன் இளமையும்அழகும்தன்தலைவன்இன்பம்துய்க்கவும்உதவாமல்,என்னைபெருமைப்படுத்தவும் உதவாமல் பசுவின் பாலானது கன்றும் உண்ணாமல் கலத்திலும் சேராமல் வீணாவதை போல் பசலை நோயால் வீணாவதாக எண்ணி பாடுகிறாள். இப்பாடல் வரிகள் 1999ஆம் ஆண்டு வெளியான ''என் சுவாசக் காற்றே'' என்ற திரைப்படத்தில் ''தீண்டாய் மெய் தீண்டாய்'' என்ற பாடலில் காதலை மோகித்துப்பாடும் ஒரு காதலியின் உணர்வாய் கவிஞர் வைரமுத்து அவர்கள் எழுதியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து,*

***கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்***
***இரும்புலிக் குருளையின் தோன்றுங் காட்டிடை***
***எல்லி வருநர் களவிற்கு***
***நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.***

*குறுந்தொகையில் குறிஞ்சித் திணையில் 47 ஆவது பாடலான இப்பாடலை நெடுவெண் நிலவினார் என்ற புலவர் பாடியுள்ளார். தலைவன் தலைவியை காண இரவுக்கு குறியே சிறந்தது. ஆனால் இரவில் காட்டில், கடும் விலங்குகளின் அச்சம் மிகுதி அது தலைவனுக்கு நன்மை அன்று. உன் ஒளியால் அவர்களது களவு வாழ்க்கை அனைவருக்கும் தெரிய வாய்ப்புண்டு. எனவே உன் வருகை நல்லை அல்லை(நன்மை அன்று) என்று தோழி உரைப்பதாய் இப்பாடல் அமைந்திருக்கும்.*

*இப்பாடலின், ''நல்லை அல்லை'' என்ற தொடரை பயன்படுத்தி 2017-ம் ஆண்டு காற்று வெளியிடை என்ற திரைப்படத்தில் கதாநாயகன் கதாநாயகிக்கு பாடுவதாக பாடல்வரிகளை அமைத்திருப்பார் கவிஞர் வைரமுத்து.*

*அதனைத் தொடர்ந்து,*

***யாயும் ஞாயும் யார் ஆகியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்?***
***யானும் நீயும் எவ் வழி அறிதும்?***
***செம் புலப் பெயல் நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.***

*என்று குறுந்தொகையில் குறிஞ்சித்திணையில் அமைந்த 40வது பாடலை செம்புலப் பெயல் நீரார் என்ற புலவர் பாடியுள்ளார்.*

*என் தாயும் உன் தாயும் என்ன உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவானவர்கள்? நீயும் நானும் எக்குடி வழியைச் சார்ந்தவர் என அறியவில்லை. ஆயினும் செம்மண் நிலத்தில் பெய்யும் மழை நீரைப் போல, நம்முடைய நெஞ்சங்கள் தாமாக அன்பில் கலந்தனவே என்று தலைவியை கண்டமாத்திரத்தில் தலைவன் பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

*இப்பாடலின் கருத்தை சிறிதும் சிதைக்காமல் 1997 ம் ஆண்டு வெளியான ''இருவர்'' திரைப்படத்தில் ''நறுமுகையே நறுமுகையே நீ ஒரு நாழிகை நில்லாய்'' என்ற பாடல் வரிகளில்*

***யாயும் யாயும் யாராகியாரே***
***நெஞ்சில் நென்றதென்ன?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்***
***உறவு சேர்ந்ததென்ன?***
***செம்புல்லும் சேர்ந்த நீர் துளி போல்***
***அ ன்புடை நெஞ்சம் கலந்ததென்ன?***

*என்ற குறுந்தொகை பாடல் வரிகளை சேர்த்து ஏ.ஆர். ரஹ்மான் இசையில் வெற்றி பாடலாய் உருவாக்கினார். கவிஞர் வைரமுத்து அவர்கள். அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு வெளியான சித்திரம் பேசுதடி திரைப்படத்தில் பட்டாம்பூச்சி என்ற பாடலிலும், 2019 ஆம் ஆண்டு வெளியான சகா திரைப்படத்தில் யாயும் ஞாயும் என்ற பாடலிலும், 2006 ஆம் ஆண்டு வெளியான சில்லுனு ஒரு காதல் திரைப்படத்தில் முன்பே வா என் அன்பே வா என்ற பாடலிலும், 1979 ஆம் ஆண்டு வெளியான தர்ம யுத்தம் என்ற திரைப்படத்தில் ஒரு தங்க ரதத்தில் பொன் மஞ்சள் நிலவு என்ற பாடலிலும், 1983 ஆம் ஆண்டு வெளியான வெள்ளை ரோஜா என்ற திரைப்படத்தில் சோலைத் தென்றல் என்ற பாடலிலும் என 6 திரைப்பட பாடல்களில் மேற்கண்ட குறுந்தொகைப் பாடல் வரிகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.*

**முடிவுரை**

*கண்களுக்கும், காதுகளுக்கும், மனதிற்கும் களிப்பூட்டும் வகையில் தற்போது ஊடகத்துறை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அவற்றுள் திரைப்படத்துறை முன்னனியில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியங்களில் தலைவன், தலைவி, கடவுள், பிற மாந்தர்கள் யாவரையும் கற்பனையிலேயே கண்டிருந்த மக்கள் நாடகங்கள், கூத்துக்கள் வாயிலாக நேரே காணும் உணர்வை பெற்றனர். அதன் முன்னேற்றப் பாதையே திரைத்துறை.*

*திரையில் இசையின் வழி இலக்கியங்களைக் கொண்டு செல்வது எளிதான காரியம் அல்ல என்று அறிந்தும் அதனை சவாலாக ஏற்று வெற்றி கண்ட கவிஞர்கள் பாராட்டிற்குரியவர்கள்.*

**துணைநூற்பட்டியல்**


1. *குறுந்தொகை மூலமும் உரையும் (புலியூர் கேசிகன் உரை).*
2. *கண்ணதாசன் திரை இசை பாடல்கள், கண்ணதாசன் பதிப்பகம்.*
3. *வைர வரிகள் - வாலி - அல்லயன்ஸ் பதிப்பகம்.*
4. *சங்க இலக்கியங்கள்.*
5. *ஆயிரம் பாடல்கள் - வைரமுத்து - திருமகள் பதிப்பகம்.*


## References


1. Kurunthogai Moolamum Uraiyum (Puliyoorkesikan Urai).
2. Kannadasan Thirai Isai Padalgal, Kannadasan Publications.
3. Vairavarigal – Vali – Allianz Publishing House.
4. Sangam Literature.
5. Aayirampadalgal – Vairamuthu – Thirumagal Prathigam.